10வது ஆண்டில்

# உலக தமிழோசை


ULAKA THAMILOSZAI

விளம்பரம்
VLAMBARAM™

(416) 282-8059
(416) 282-4978

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 10 OCTOBER 15, 2000 பாலம் 20




உருவத்தை உருக்கியவர்களை உள்ளுணர்வாக, உயர்வாகப் போற்றும் உன்னததினம்...

*-மாவீரர் தினம்*

❊ கணணி இல்லாதவர்க்கு எந்த உலகம் (பக். 8)
❊ ஒலிம்பிக்கில் தமிழரிற்கு தங்கப்பதக்கம் எப்போது? (பக்.6)
❊ சிறுபிள்ளைகளின் பல் பராமரிப்பு (பக். 5)
❊ ஹெலி வால்வெள்ளி என்றால் என்ன? (பக். 09)
❊ 5 மாதத்தில் பிள்ளை பிறக்குமா? (பக். 2)
❊ ஆண்டு இறுதியில் புதிய வாகனம் வாங்கலாமா? (பக். 3)
❊ வாகனச் சாரதிக்கு வழங்கும் குற்ற அறிவிப்பு (பக். 13)
❊ ஆறடி துப்பாக்கியா ஆறங்குல நாக்கா கொடியது? (பக். 12)

## *தீபாவளி நல்வாழ்த்துக்கள்*



அன்பர்கள்
நண்பர்கள்
விளம்பரதாரர்கள்
ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
உளம் கனிந்த

தீபாவளி
நல்வாழ்த்துக்கள்

## அருள் விருந்து

*-செ. சிவசுப்பிரமணியம்*

☞ திடீரென்று எழுகின்ற தற்காலிக உணர்ச்சி வேகத்தில் பகட்டுடைய செயல்கள் புரிவோரைக் காண்கிறோம். அத்தகைய செயல்கள் ஒரு மனிதனுடைய உண்மை இயல்பை விளக்கமாட்டா. ஒருவன் தனது தினசரிக் கடமைகளை எப்படி இயற்றுகிறானோ அதுவே அவன் இயல்பை விளக்கும்.

☞ அரசனுடைய பாராட்டுதலுக்குப் பாத்திரமானவன் பாமரன் ஒருவனுடைய பாராட்டுதலைப் பொருள்படுத்தான். கடவுளின் அருளுக்குப் பாத்திரமான பக்தன் ஒருவன் உலகப் பொருள்களை மதியான்.

☞ மாசுகளில் கொடியது அக்ஞானம் என்னும் மாசு. அதை அகற்றிடுக.

☞ ஜடப்பொருள் சக்திவாய்ந்தது என்பது வெளிப்படை பின்பு எண்ணமோ எல்லாம் வல்லது. நல்லெண்ணமே நிறைந்தவன் ஆய்விடு. தூயஎண்ணம் வலுக்குமளவு நீ சக்திமான் ஆகின்றாய்.

## உன்னை அறிந்தால்

தேர்தல் வருவதும் போவதும் காலத்துடன் நிகழும். விரும்பியோ, விரும்பாமலோ தேர்தல்கள் வரும், போகும், வந்து கொண்டு இருக்கும், போய்க் கொண்டே இருக்கும். இதனை மாற்றுவது இலகுவாக இருக்காது. தேர்தல்கள் நடைமுறையில்தான் எத்தனை முறைகள். ஜனநாயகம் பேசும் நாடுகளில் எல்லாம் முறையான தேர்தல்களா நடைபெறுகின்றது. நூறு வீதம் எதனையும் சரியாகச் செய்வது என்பது இலேசான விடயமல்ல. அப்படியிருக்க நூறு வீதமும் தலைகீழாகச் செய்வது சரியா? பதவியில் இருப்பவர்கள் தங்களின் சந்தர்ப்பத்தை கருதி தேர்தல் வைப்பது முறையா? தேர்தல் நடத்தும் முறையில் வடஅமெரிக்காவில் ஓரளவு சிறந்த முறையில் நடைபெறுவது, ஜனநாயகம் பேசுவதற்கு அருகதை உள்ளவர்கள் எனக் கூறலாம். ஆனால் ஸ்ரீலங்கவோ ....................? இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன. பலர் தேர்தலைப் பற்றி பேசும் போது கூறும் வசனம, இது ஒரு பிழையான கொள்கை. நாம் வாக்குகளை பதிவு செய்யாவிட்டால், வேறு ஒருவரின் விருப்பத்திற்கு நாங்கள் நடக்க வேண்டி வரும். அரசியல் மாற்றங்கள்தான் எம் வாழ்வின் மாற்றத்தின் முக்கிய பங்கை வகிக்கின்றது. இது மறுக்கவோ. மறைக்கவோ முடியாத முழு உண்மை. எனவே எமது வாக்குகள் ஒரு நல்ல முடிவுக்கு பங்களிப்பதே சிறந்தது.

நல்லதைச் சிந்திப்போம்.. நல்லதே நடக்கும்.
வெற்றி நமதே!!

-நெற்றிக்கண்ணன்

இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள்
**சபோனாவிற்கு!**

SABONA
*& Gift*

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151
2602 B Eglinton Ave. E., Scarborough

## சாதனை செய்ய ஆறு நல்ல வழிமுறைகள்

1. மிகப் பெரிய சாதனைகள் சாதிக்கப்படுவது வலிமையால் அல்ல, விடா முயற்சியினால்.
2. ஊக்கத்துடனும், துணிவுடனும் எந்த ஒரு காரியத்தையும் தொடங்குதல்.
3. ஆழ்ந்து சிந்தித்து வேலைகளை ஒழுங்கு படுத்துதல்.
4. சிந்தனையைச் சிதறவிடாது ஒருமுகப்படுத்தி கவனமாகச் செயல்படுதல்.
5. நேரத்தையும், பணத்தையும் திட்டமிட்டுப்பயன்படுத்துதல்
6. எப்போதும் சுறுசுறுப்புடனும், ஊக்கத்துடனும் இருத்தல்.

உலக தமிழோசை மூலம் ஆக்கங்கள் தருபவர்கள் பிரதி சனி தோறும் 12:15மணிக்கு CTBC இல்



SINGAPORE CELLUAR

$29.00
Mon. - Fr. 6:00 p.m to 8a.m FREE
Sat. & Sun. FREE & Much More

$49.00
3 Months Service
Numeric + Voice
+ Activation FREE PAGER

$55.00 +Taxes / Month
7 a.m. - 7 p.m. 400min. இலவசம்
7 p.m. - 7 a.m. கிழமை நாள் இலவசம்
Fri. 7 p.m. - Mon. 7 a.m. இலவசம்
மேலதிக நிமிடம் 20 சதம் மட்டுமே

CANTEL
Bell Mobility

Mobile Message, Call Waiting, Call Display
per second billing included.
மேலதிக விபரத்திற்கு சக்தி: (416) 745-2378

HOTLINE: (416) 980-1234

துரித பணமாற்றுச் சேவை



வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
☎ (416) 267-8221



சிவாகம கிரியா பீடம்
☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr., Scarborough, Ont.

VLAMBARAM, P.O. BOX 37527. 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com



# அறிவும் ஆக்கமும் (66)

-விஜே குலத்துங்கம்

இலங்கை,இந்தியா,சீனா,ஜப்பான் என்று உலக சனத்தொகையில் அரைப்பகுதியினரின் உணவு அரிசி-சோறு ஆகும். ஒரு வருடத்தில் உலக நாடுகளின் மொத்த உற்பத்தி 500 மில்லியன் தொன்களாகும். ஆரம்பத்தில் காட்டுப் பயிராக இருந்த அரிசி-நெல் 5000 வருடங்களுக்கு முன்னர்தான் மனிதரால் பயிரிடப்பட ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் நெற்பயிர் இனங்கள் 6-7 மாதங்களுக்கு மேல் வளர்ந்துதான் அறுவடை செய்யக் கூடியதாக இருந்தது. அத்துடன் விளைச்சலும் குறைவாக இருந்தது. இதனால் ஒரு வருடத்தில் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பிலிருந்து எடுக்கக்கூடிய விளைச்சல் குறைவாக இருந்தது. ஆனால் ஆரம்பத்தில் அது ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை. ஏனெனில் ஆரம்ப காலகட்டத்தில் எல்லோருமே விவசாயிகளாகவும், சனத் தொகை குறைவாகவும் இருந்தது. ஆனால் சனத்தொகை பெருகிக் கொண்டு போகவும் மக்கள் விவசாயத் தொழிலை விட்டு, மற்றைய தொழில்களை நாடி நகர்ப்புறம் சென்றதாலும் உற்பத்தி அதிகரிப்பு அவசியமாகியது.

விஞ்ஞான வளர்ச்சி முன்னேற, இரு இனங்களை கலப்புப் பிறப்புச் செய்து புதிய இனங்கள் உருவாக்கப்பட்டன. 1960-70 களில் பசுமைப் புரட்சி மிகவும் பிரபல்யம் அடைந்திருந்தது. இந்தக் காலகட்டத்தில் குறைந்த வயதுடையதும் அதிக விளைச்சல் தரக்கூடிய புதிய இனங்களும் உருவாக்கப்பட்டன. இலங்கையில் நெற்பயிர் விவசாயத்தில் ஈடுபட்டவர்களுக்கு **BG** மற்றும் **IR** போன்ற இனங்கள் பற்றி தெரிந்திருக்கும். BG-11, **IR8** போன்ற இனங்கள் பிரபல்யமானவை. இவை புதிய கலப்புப் பிறப்பு இனங்களாகும். பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையத்தினால் விருத்தி செய்யப்பட்ட இனங்கள் **IR** இனங்கள் என்றும், இலங்கையிலுள்ள பத்தலகொட என்னும் இடத்திலுள்ள நெல் ஆராய்ச்சி நிலையத்தினால் விருத்தியாக்கப்பட்ட **BG** இனங்கள் என்றும் அழைக்கப்பட்டன. இவை 3-31/2 மாதங்களில் அறுவடை செய்யக்கூடியனவாக இருக்கின்றன. இந்தக் கால கட்டத்தின் பின்னர் நெல் இனவிருத்தியில் பாரிய அளவு முன்னேற்றம் காணப்படவில்லை.

நெற்பயிர் உட்பட பல பயிர்களில் உள்ள முக்கிய ஒரு பிரச்சனை பூச்சிகளின் தாக்கமாகும். இந்தப் பூச்சிகளின் தாக்கத்தினால் உலக தானிய உற்பத்தியில் 1/3 பகுதிக்கு மேல் வீணாகிவிடுகின்றன். எனவே அதிகரித்து வரும் சனத் தொகைக்கு ஈடுகொடுக்கும் படியாக உற்பத்தியை அதிகரிக்க ஒரு வழி இந்த பூச்சிகளை கட்டுப்படுத்துவதாகும். தற்போது பூச்சிகளை கட்டுப்படுத்த உபயோகிக்கப்படுவது பூச்சி கொல்லிகளாகும். இவை இரசாயணத் திரவங்களாகும். ஆனால் இந்த கிருமிநாசினிகள் விலை உயர்ந்தவை. அத்துடன் சுற்றாடலை மாசுபடுத்துகின்றன. அத்துடன் மற்றைய பயன்தரக் கூடிய பூச்சிகளையுயம் அழித்து விடுகின்றன.

இதற்காக தற்போது பிரபல்யம் அடைந்து வரும் முறையான **Genetically modified Crop** எனப்படும் பிறப்புரிமை அமைப்பு மாற்றியமைக்கப்பட்ட பயிர்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானிகளும், சீனாவைச் சேர்ந்த விஞ்ஞானிகளும் சேர்ந்து ஒரு புதிய இனம் ஒன்றை உருவாக்கியுள்ளார்கள். இந்த இனம் நெல் விளைச்சலை பெரிதும் பாதிக்கும் இரு பூச்சிகளான இலைச் சுருட்டி, மற்றும் **Yellow Stem borer** எனப்படும் மஞ்சள் தண்டு குத்தி போன்ற பூச்சிகள் தாக்க முடியாதவை. இந்த இனத்தில் பூச்சிகளைக கொல்லக்கூடிய **Bt** எனப்படும் ஒரு புரதம் உருவாக்கப்படுவதால் இவற்றை பூச்சிகள் தாக்காது.



அமெரிக்க விஞ்ஞானிகளாலும் ஒரு புதிய இனம், இந்த **Genetical engineering** முறையால் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் விளைச்சல் பழைய இனங்களை விட 35 வீதம் அதிக விளைச்சலை கொடுக்கக் கூடியன. சோளப்பயிரிலிருந்த ஒரு **Gene[** நெற்பயிரில் புகுத்தப்பட்டது. இந்த **gene** பயிரின் உணவு உற்பத்தியை அதிகரிக்கக் கூடியது.இதனால் இந்த புதிய நெற்பயிா அதிக விளைச்சலை கொடுக்கின்றது.

உலக சனத்தொகையில் அரைப்பகுதியினர் அரிசி உணவுகளை உட்கொண்டாலும் இதில் சத்துணவு மிகவும் குறைவு. ஆனால் இந்த மக்களின் உணவுப்பழக்கத்தை மாற்றுவது மிகக் கடினம். எனவே நெற்பயிரின் சத்துக்களை அதிகரிக்க பல முயற்சிகள் எடுக்ககபப்படுகின்றன. **Biotechnology** எனப்படும் உயிரியல் தொழிநுட்ப முறையில் ஆராய்ச்சிகளை நடத்திவரும் பிரபல்யமான **MONSANTO** என்ற நிறுவனம் அரிசியின் சத்தை அதிகரிக்க பல முயற்சிகள் செய்து வருகினன்றன. ஆரம்ப முயற்சியாக விற்றமின் **A** அதிகமாயுள்ள நெல் இனம் ஒன்றை உருவாக்கியுயள்ளார்களா. விற்றமின் A குறைபாட்டால் ஒவ்வொரு வருடமும் 1 மில்லியன் குழந்தைகள் இறக்கின்றன. அத்துடன் 3 இலட்சம் பேர் ஒரு வருடத்தில் இறக்கின்றார்கள். இவர்கள் புதிதாக தயாரித்துள்ள இனம் **Golden rice** என அழைக்கப்படுகின்றது. இதன் நிறம் காரணமாகவே இந்த பொன்நிற அரிசி என்று அழைக்கப்படுகின்றது. விற்றமின் **A** ஜக் கொடுக்கக்கூடிய கரோட்டினன் **Carotene** என்ற பொருள் காணப்படுவதனாலேயே பொன் மஞ்சள் நிறமாக இந்த புதிய அரிசி இனம் உள்ளது.




விற்றமின் A ஆனது இயற்கை நோய் தடுப்புமுறையான **Emmune System** த்தை நன்கு இயங்கச் செய்கின்றது. எனவே இந்த புதிய நெல் இனத்தின் வருகையினால் 100 மில்லியன் குழந்தைகள் உலகளாகிய அளவில் நன்மை அடைய இருக்கின்றார்கள்.

**"அறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் – 361 Highglen Ave, Markham, Ontario, L3S 3M2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு e-mail அனுப்பவும்.**


13 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்** புதிய இடத்தில்

☎: (416) 267-0408



## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 112

**இடமிருந்து - வலம்**

1. "விளம்பரம்" பத்திரிகையின் தற்போதய பெயர்
5. பத்தினி (வல-இட)
6. வலிமை (வல-இட)
7. குறைத்தல் செய் (வல-இட)
8. உண் (வல-இட)
9. நெருப்பு
11. நரிக்கும் இப்பழத்திற்கும் தொடர்பு உண்டு

**மேலிருந்து கீழ்**

1. புல் செருக்கும் கருவி
2. கௌரவம்
3. நண்பன்
4. திக்கு (கீழ்-மேல்)
5. தருணம்
10. ஒரு நிறம்
11. இடையில் நுழை (கீழ்-மேல்)
12. பஞ்சு விளையும் செடி (கீழ்-மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் முறை தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் OCTOBER 27, 2000க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.



**111இல் வெற்றி பெற்றோர்**
1) K. Kanagaratnam Scarborough, Ont.
2. ச அமலன், Mississauga, Ont.

*ஆட்டிறச்சி வியாபாரத்தல் தமிழ்மக்களின் உள்ளங்களை வென்றவர்!
* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினம் தருவித்து வாடிக்கையாளர்களின தொகையில் உயர்ந்தவர்!
* வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய இடத்தில்

*733 kennedy Road*
*[Ken-Mark Plaza]*

**BANANA LEAF**
**Take-out & Catering**

*Everyday Special*
ஆடு, மாடு, புரியாணி — Free வட்டிலப்பம் — $5.50

**தினமும் ஸ்பெஷல்**

| | | |
|---|---|---|
| செவ்வாய், வெள்ளி | மரக்கறி சாப்பாடு 10 வகை கறியுடன் மத்தராஸ் தாளி (FREE POTATOES PORI) | $4.99 |
| புதன் | புட்டு, முட்டைப்பொரியல், இறால் குழம்பு சம்பல், பருப்பு | $3.99 |
| வியாழன் | 3ரொட்டி, சிக்கன் பாலுண்டி கட்டைச்சம்பல் | $3.99 |
| சனி, ஞாயிறு | மீன் சாப்பாடு, மரக்கறி வகைகளுடன் | $5.50 |
| ஞாயிறு | *LampRice* | $5.50 |
| திங்கள் | மூடப்பட்டிருக்கும். | |

431 Nugget Avenue, Unit 10, Scarborough, Ont. (Markham & Nugget)
Tel: (416) 609-9247 Pager (416) 600-1030, (416) 704-8208 (24hrs.)

# APPLEMORE AUTOMOTIVE


உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing




- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility




**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple

## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING



>Railing >Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5

## கலைமகள் புத்தக நிலையம்

- சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
- தமிழ்ப் புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
- இலங்கை/இந்திய பத்திரிகைகள்
- குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
- *CREDIT LEVEL* தமிழ் பாடப்புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

கலைமகள் புத்தக நிலையம்

**துரித பணமாற்றுச் சேவை**

594 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 921-5018

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605

3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH, ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494

### நினைவில் நிலைத்து நிற்கவேண்டியவை

8. ஒலிம்பிக் வளையங்களின் நிறங்கள் எவை?
   **பச்சை, சிகப்பு, மஞ்சள், நீலம், கறுப்பு**
9. பெண்கள் இடையில் அணியும் அணிகலன்கள் ஐந்து தருக?
   **விரிசிகை, கலாபம், பருமம், மேகலை, காஞ்சி**
10. இரண்டு எண்களில் எழுதக் கூடிய அதிகூடிய பெறுமதியை உடைய எண் எது? **99**

நியூ மிலேனியத்தில்
ஸ்காபரோவில் 9 வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க
வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

**Also Air Conditioning Service & Repair**


## NTE AUTO INC.
**New Trade Engineering**

## என். ரி. இ. ஓட்டோ இங்க்

Contact: Sivabalan — சிவபாலன்

**Tel: (416) 750 - 1573**

?1 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.



In New Millennium We are entering 9th year service in Scarborough

## YARLCAN
## STEAM CLEANING



உங்கள்
சகலவிதமான
**CARPET CLEANING**
தேவைகளுக்கும்
**DUCT CLEANING**
தேவைகளுக்கும்
அழையுங்கள் மோகன்

Tel: (416) 724-9085
Cell. 721-9709



# T. R. S. AUTO

SPECIALIST
TOYOTA
HONDA


## MOTOR VEHICLE SPECIALISTS

## FOR REPAIR & BUY & SELL



உள்ளூர், இறக்குமதி செய்யப்பட்ட சகல ரக வாகனங்களுக்கும்
அனுபவம் வாய்ந்த மெக்கானிக்குகளால் சிறந்த
முறையில் திருத்திக் கொள்ள நாடுங்கள்

- We Sell Quality Used Cars
- Licensed Mechanics on duty
- Guaranteed Services
- Reasonable Rates
- Free Visual Inspection and Proper Advice
- Licensed to do Air Condition Services
- We Rebuild Alternators & Starters
- Rust Proofing
- Body Work and paint



- TUNE - UP
- BRAKES
- GENERAL MAINTENANCE
- ELECTRICAL WORKS
- ALL KIND OF REPAIRS


**OIL & FILTER CHANGE WITH CASTROL GTX**

**ALARM, STEREO, ELECTRICAL WORKS USED PARTS SALES, ETC.**

**We sell New & Used Tire**

**SPECIAL**

| | |
|---|---|
| Wheel Balance & Tire Rotation | $22.99 |
| Front Brake Pad & Labour (Front Brake) | $59.99 |
| Rear BRAKE (Shoe & Labour) | $59.99 |




**Call: Kumar**

**Tel: (416) 609-8110**

**86 MELFORD DR. UNIT 14**

## பல்லுப்போனால் சொல்லுப் போகுமா?

Dr. M. உமா
பல் வைத்திய நிபுணர்

### சிறுவர் பல் பராமரிப்பு




சிறுவர்களில் முதலில் உருவாகும் பற்கள் பால்பற்கள். **(Primary Teeth)** எனப் படும். இப் பற்கள் பிறந்து நான்கு(4) மாதத்திலிருந்து பதினெட்டு(18) மாதத்திற்கு இடையில் உருவாகத் தொடங்கும். அனேகமாக சிறுவர்களிற்கு பால்ப்பற்கள் எல்லாம் மூன்று(3) வயதளவில் முழுமையாக உருவாகி முடிந்து விடும்.

பால்ப்பற்கள் சிறுவர்களிற்கு ஆறு(6) வயதாகும் போது இயற்கையாக விழுந்து நிரந்தர பற்களால் பிரதியீடு செய்யத் …ங்கப்படும். அனேகமாக நிரந்தரப்பற்கள பதின்மூன்று(13) வயதளவில் முழுமையாக உருவாகி விடும்.

பால்ப்பற்கள் உங்கள் சிறுவர்களின் எதிர்கால பல்லின் அமைப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இப்பற்களின் உதவியுடனேயே நிரந்தரப்பற்கள் தங்களது உருவாகும் நிலைகளை சரியாக அமைத்துக் கொள்கிறது. இப்பற்களில் பின்கடவாய்ப் பற்கள்**(Primary Molars)** முக்கியமானவை. இப்பற்களை சிறுவர்கள் உரியகாலத்திற்கு முன்பு இழப்பார்கள். ஆனால் உருவாகும் நிரந்தரப்பற்கள் சரியான நிலைகளை அமைத்துக் கொள்ள முடியாமல் இருக்கும். எனவே சிறுவர்களின் பால்ப்ற்களை கவனமாக பேணுங்கள்.(முக்கியமாக பற்சூத்தையின் தாக்கத்தால் சிறுவர்கள் பால்ப்பற்களை இழக்கிறார்கள்)

*குறிப்பு:
பால்ப்பற்கள் உருவாகும்போது சில சிறுவர்களிற்கு காய்ச்சல்**(Fever)** பல்முரசில் அசௌகரியம்**(Chew on things)** ஆகிய அறிகுறிகள் தென்படும். இதற்கு **Cold teething rings**ஐ கடிப்பதற்கு கொடுத்தும் **Numbing Creams**ஐ முரசில் பூசி பல் முளைத்தலை இலகுவாக்கலாம்



…ary teeth are present deep in the gums … birth. Beginning around age 6, they fall out to make way for permanent teeth.

Permanent teeth are the ones the child will have for the rest of his or her life.

சிறுவர்களிற்கான முதல் பல் வைத்தியரின் சந்திப்பு, அவர்கள் இரண்டு(2) வயதை அடையும் போது தொடங்க வேண்டும். அதன் பின்பு வருடத்திற்கு இரு தடவை பல் வைத்தியரை சந்திப்பதன் மூலம் பற்களின் ஆரோதக்கியத்தை முறையாக பேணலாம்.

சிறுவர்களில் பொதுவாக காணப்படும் பல் வியாதி என்னவென்று நீங்கள் அறிந்திருப்பீர்கள்?

### பற்சூத்தை

சில சிறுவர்களிற்கு இச்சூத்தையானது அனேக பற்ககளை தாக்கிவருகிறது. இதனை **Feedig bottle syndrome** என்று சொல்வார்கள். இது சிறுவர்கள் **Feeding bottle** உடன் நித்திரைக்கு செல்வதால் உருவாகிறது. ஏனெனில் பாலில் உள்ள சீனிப்பதார்த்தங்கள் பல்மேற்ப்பரப்பில் தேங்கியிருந்து பற்சூத்தையை உருவாக்கிறது. இதனை தடுப்பதற்கு சிறுவர்களை **Feeding bottle** உடன் நித்திரைக்கு செல்ல அனுமதிக்காதீர்கள். அத்துடன் சிறுவர்கள் நித்திரைக்கு செல்வதற்கு முன்பு பற்களை சுத்தம் செய்து விடுங்கள்.

இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்.............


**Safety Truck**
**Training School Ltd.**

Training & Trucking Classes A, D & Z

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ்
TRUCK DRIVING பயிற்சி இடம் (6ம் ஆண்டு)
வாரத்தில் எழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

**We accept Welfare & Unemployment Insurance**




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும். (One on One Training) அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

**In Classes**
- 365 (Learning Permit)
- Lock Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்
**YOGAN SOCKALINGAM**
Truck Driving போதனாசிரியர்
(12 Years Canadian Experience with Trucks)

**Tel: (905) 793-9546 / (416) 616-5979**
**250 Summerlea Road, Brampton, ON**


சான்றோர் சொல்லமுதம்
தன்காலில் நடந்து போனால் முன்னேற்றம்
மற்றவன் முதுகின்மேல் ஏறிப்போனால் ஆபத்து - நாமகள்


**TAMIL INSURANCE CLAIMS CONSULTANT**
தமிழில் இலவச ஆலோசனை



வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால்
என்ன செய்ய வேண்டும்?
RAVI தகுந்த ஆலோசனை RAVI
உரிய நட்ட ஈடு <RAVI> சட்ட உரிமை
விபத்துக்குள்ளானவரின் சம்பள இழப்பீடு
மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும் அறிவுரைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும்
சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள ரவீ நடராஜா (12 வருடத்திற்கு மேலான அனுபவம்)




TEL:(416) **245-6555**
FAX:(416) **245-7766**
2095 Weston Rd. #201 (South of HWY 401)
Toronto, Ont.,M9N 1X7



**SUBA**
**DJ SERVICES**
**வண்ணக்கோலம்**

திருமணம். பூப்புனித நீராட்டு விழா.
அரங்கேற்றம் மற்றும் அனைத்து சமய வைபவங்களுக்கும்
அழகிய முறையில் கோலம் செய்து தரப்படும்.



**Pl.Call:(416)431-9451/565-4869**

# விளையாட்டுத் தகவல்கள் (63)


-எஸ். கணேஷ்

## சிட்னி ஒலிம்பிக்ஸ் 2000 இறுதி கண்ணோட்டம்!!!



கடந்த 'உலக தமிழோசை' சில இதழ்களில் 'ஒலிம்பிக் 2000' பற்றிய விபரங்களைப் பார்ப்தோம். இவ் இதழில் இறுதி நிகழ்ச்சிகளின் கண்ணோட்டத்தைப் பார்ப்போம். முக்கியமாக கனடாவின் பங்களிப்பு இவ் ஒலிம்பிக் இல் வீழ்ச்சி அடைந்துள்ளது எனலாம். முக்கியமாக அதிக அளவு இரசிகாகளால் விரும்பிப் பார்க்கப்படும் 100 மீற்றர் ஓட்டம் மற்றும் அஞ்சல் ஓட்டம் ஆகியவையில் ஏற்பட்ட பெருமளவு வீழ்ச்சி ரசிகர்களை அதிருப்தி அடையச் செய்துள்ளது. கடந்த இரண்டு ஒலிம்பிக்ஸிலும் வேக ஓட்டத்தில் தனிச் சிறப்பை நிரூபித்து வந்த கனடா இம்முறை ஏன் வீழ்ச்சி அடைந்துள்ளது என்ற கேள்விக்கு பல காரணங்கள் சொல்லப்பட்டாலும் முக்கிய காரணம் நிதி ஒதுக்கீடு பற்றாக்குறையும். பழைய வீரர்களை நம்பியிருந்ததுமே. முக்கிய காரணங்களாகும். எப்படியான காரணங்கள் முன்வைத்தாலும் "ஆடத் தெரியாதவனுக்கு மேடை சரியில்லை" என்பது போல இப்படியான நொட்டிச்சாட்டுகளை எடுத்துக கொள்ள முடியாது என்பது உண்மை. ஆனால் எவரும எதிர்பார்க்காத Tennis விளையாட்டில் உலக புகழ் பெற்ற அவுஸ்திரேலிய வீரர்களை கனேடிய வீரர்கள் வென்றார்கள் என்பது கனடாவிற்கு புகழ் சேர்க்கின்றது.

ஓட்டம். நீச்சல், சைக்கிள் ஓட்டம் ஆகிய மூன்று பகுதிகள் அடங்கிய Triathlon என அழைக்கப்படும் போட்டியில் கனடா பெற்ற முதலாவது தங்கப்பதக்கம்.




Simon Whitfield, Triathlon


அடுத்து முக்கியமாக சிட்னி ஒலிம்பிக்ஸ் இல் பல பல தமிழ் பெயர்களை காணக்கூடியதாக இருந்தது. மேலும் அடுத்த ஒலிம்பிக் இல் நிட்சயமாச மேலும் பல தமிழ் வீரர்களைக் காணக்கூடியதாக இருக்கும் என்பது திண்ணமாகும். கனடாவில் இருந்து சோனியா ஜெயசீலன் ரெனிஸ ஆட்டத்தில் பங்கு கொண்டார். ஆனால ஒற்றையர் ஆட்டத்தில் முதல சுற்றிலேயே தோல்வி கண்டார்.

Nicholas Gill
Judo போட்டியில் இரண்டாம் இடம்.



இந்தியாவில் இருந்து நிருபா வைத்தியநாதன் ரெனிஸ் இரட்டையர் ஆட்டத்தில் பங்கு கொண்டார். இந்தியா (Field Hockey குழுவிற்கு. பாஸ்கரன Head Coach ஆக தலைமை தாங்கினார். France இல் இருந்து சங்கீதா திருப்பதி என்பவர் Fencing துறையில் பங்குபற்றினார். எடை தூக்கும் போட்டியில் இந்தியா சார்பாக கர்ணம் மல்லேஸ்வரி மூன்றாவதாக வந்து வெண்கல பதக்கத்தைப் பெற்றார். மொத்தத்தில் இந்தியா பெற்ற ஒரே ஒரு பதக்கம் இதுவாகும். இதற்கெல்லாம் ஒருபடிமேலே போய் இலங்கையைச் சேர்ந்த சுசாந்திகா ஜெயசிங்கி 400 மீற்றர் ஓட்டத்தில் வெண்கலப பதக்கத்தைப் பெற்றார். உண்மையிலேயே இவர் பெற்ற வெண்கலப்பதக்கம் மிகவும பெறுமதியானது எனலாம். ஏனெனில் இவருடன் ஓடிய மற்றவர்களைப் பார்க்கும் போது உலக பிரசித்தி பெற்ற ஓட்டங்காரர்களுடன் ஓடி வென்றுள்ளார். இதற்கெல்லாம் சிகரம் வைக்குமாற்போல ஒருபடி மேலே போய் BBCக்கு அளித்த பேட்டியில் இலங்கையில் அல்லலுறும தமிழ் பெண்களுக்காக குரலும் கொடுத்துள்ளார். ஒரு சிங்கள பெண வீராங்கனையான இவர் இலங்கையில் நடப்பவைகளை வெட்டவெளிச்சமாக உலகிற்கு எடுத்தியம்பியவர் என்ற பெருமையும் பெறுகின்றார்.

69 Kilogram Class இல் Wrestling இல் தங்கப்பதக்கம்



Daniel Igali, Wrestling


Compu Service
COMPUTERS & NETWORK
(416) 399-3235 - (905) 432-2422
CONTACT - ALAN SIVA
@ (416) 431-3753
(416) 438-4357
(416) 399-3235


COMPUSERVICE International
COMPUTER SALES
NEW & USED
NETWORK DESIGN
& INSTALLATION
REPAIRS
UPGRADES
CD BACKUPS
SOFTWARES
(905) 432-2422 *FAX: (416) 431-5828
Email: compuservice@compuserviceint.net
web: www.compuserviceint.net



Aruna Food
EAST WEST INDIAN AND CANADIAN GROCERIES
* துரித பணமாற்றுச் சேவை
* VIDEO CONVERT SYSTEM
நாங்கள் எந்த மலிவு விலையையும் சமன் செய்வோம்.
அருணா பூட்
3585 Keele Street, Unit 11
North York, Ont. M3J 3H5
Tel: 416- 638-9554
Fax: 416- 638-9584



BALAN APPLIANC
சகலவிதமான வீட்டு மின் உபகரணங்கள் (Appliances) மற்றும் வீட்டு மின்சார வேலைகளை அனுபவமிக்கவரால் திருத்திக் கொள்வதற்கு அழையுங்கள் பாலன்



தொடர்புகளுக்கு: (416) 438-6927
Pager 379-1071


சிட்னியி ஒலிம்பிக் இன் இறுதியி பதக்க விபரங்கள்

### MEDAL STANDING

Final standing
(300 Medal Events)

| | G | S | B | Tot |
|---|---|---|---|---|
| United States | 39 | 25 | 33 | 97 |
| Russia | 32 | 28 | 28 | 88 |
| China | 28 | 16 | 15 | 59 |
| Australia | 16 | 25 | 17 | 58 |
| Germany | 14 | 17 | 26 | 57 |
| France | 13 | 14 | 11 | 38 |
| Italy | 13 | 8 | 13 | 34 |
| Cuba | 11 | 11 | 7 | 29 |
| Britain | 11 | 10 | 7 | 28 |
| South Korea | 8 | 9 | 11 | 28 |
| Romania | 11 | 6 | 9 | 26 |
| Netherlands | 12 | 9 | 4 | 25 |
| Ukraine | 3 | 10 | 10 | 23 |
| Japan | 5 | 8 | 5 | 18 |
| Hungary | 8 | 6 | 3 | 17 |
| Belarus | 3 | 3 | 11 | 17 |
| Poland | 6 | 5 | 3 | 14 |
| **Canada** | **3** | **3** | **8** | **14** |
| Bulgaria | 5 | 6 | 2 | 13 |
| Greece | 4 | 6 | 3 | 13 |
| Sweden | 4 | 5 | 3 | 12 |
| Brazil | 0 | 6 | 6 | 12 |
| Spain | 3 | 3 | 5 | 11 |
| Norway | 4 | 3 | 3 | 10 |
| Switzerland | 1 | 6 | 2 | 9 |
| Ethiopia | 4 | 1 | 3 | 8 |
| Czech Republic | 2 | 3 | 3 | 8 |
| Kazakstan | 3 | 4 | 0 | 7 |
| Kenya | 2 | 3 | 2 | 7 |
| Jamaica | 0 | 4 | 3 | 7 |
| Denmark | 2 | 3 | 1 | 6 |
| Indonesia | 1 | 3 | 2 | 6 |
| Mexico | 1 | 2 | 3 | 6 |
| Georgia | 0 | 0 | 6 | 6 |
| Lithuania | 2 | 0 | 3 | 5 |
| Slovakia | 1 | 3 | 1 | 5 |
| Algeria | 1 | 1 | 3 | 5 |
| Belgium | 0 | 2 | 3 | 5 |
| South Africa | 0 | 2 | 3 | 5 |
| Morocco | 0 | 1 | 4 | 5 |
| Taiwan | 0 | 1 | 4 | 5 |
| Iran | 3 | 0 | 1 | 4 |
| Turkey | 3 | 0 | 1 | 4 |
| Finland | 2 | 1 | 1 | 4 |
| Uzbekistan | 1 | 1 | 2 | 4 |
| New Zealand | 1 | 0 | 3 | 4 |
| Argentina | 0 | 2 | 2 | 4 |
| North Korea | 0 | 1 | 3 | 4 |
| Austria | 2 | 1 | 0 | 3 |
| Azerbaijan | 2 | 0 | 1 | 3 |
| Latvia | 1 | 1 | 1 | 3 |
| Yugoslavia | 1 | 1 | 1 | 3 |
| Estonia | 1 | 0 | 2 | 3 |
| Thailand | 1 | 0 | 2 | 3 |
| Nigeria | 0 | 3 | 0 | 3 |
| Slovenia | 2 | 0 | 0 | 2 |
| Bahamas | 1 | 1 | 0 | 2 |
| Croatia | 1 | 0 | 1 | 2 |
| Moldova | 0 | 1 | 1 | 2 |
| Saudi Arabia | 0 | 1 | 1 | 2 |
| Trinidad | 0 | 1 | 1 | 2 |
| Costa Rica | 0 | 0 | 2 | 2 |
| Portugal | 0 | 0 | 2 | 2 |
| Cameroon | 1 | 0 | 0 | 1 |
| Colombia | 1 | 0 | 0 | 1 |
| Mozambique | 1 | 0 | 0 | 1 |
| Ireland | 0 | 1 | 0 | 1 |
| Uruguay | 0 | 1 | 0 | 1 |
| Vietnam | 0 | 1 | 0 | 1 |
| Armenia | 0 | 0 | 1 | 1 |
| Barbados | 0 | 0 | 1 | 1 |
| Chile | 0 | 0 | 1 | 1 |
| India | 0 | 0 | 1 | 1 |
| Iceland | 0 | 0 | 1 | 1 |
| Israel | 0 | 0 | 1 | 1 |
| Kyrgyzstan | 0 | 0 | 1 | 1 |
| Kuwait | 0 | 0 | 1 | 1 |
| Sri Lanka | 0 | 0 | 1 | 1 |
| Macedonia | 0 | 0 | 1 | 1 |
| Qatar | 0 | 0 | 1 | 1 |

Caroline Brunet
Kayak போட்டியில்
வெள்ளிப் பதக்கம்




Anne Montminy Emilie Heymans ஆகிய
இருவரும் Diving போட்டியில்
இரண்டாம் இடம்



கனடாவின் சரித்திரத்தில் முதலாவது
தடவையாக Tennis இல் இரட்டையர்
ஆட்டத்தில் தங்கப்பதக்கம்.



Daniel Nestor, Sébastien Lareau; Tennis

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

*-தொகுப்பு - பரம்*

இந்த இதழிலும் தொடருகிறது சினிமா ஆண்டு 1981. 104 படங்களைத் தந்த ஆண்டு. ரஜினி, கமல், விஜயகாந்த், சிவகுமார், ஜெய்சங்கர், சத்தியராஜ், பாக்கியராஜ் போன்ற இன்னும் நடிப்புலகில் இருக்கும், இருந்த பல நடிகர்கள் நடித்த பல படங்கள் வெளிவந்தன.

இந்த ஆண்டில் வந்த வெற்றிப்படங்கள் எனச் சொல்லக் கூடியவை அலைகள் ஓய்வதில்லை, அந்த ஏழுநாட்கள், சட்டம் ஒரு இருட்டறை, தண்ணீர் தண்ணீர், தில்லுமுல்லு, பாலைவனச்சோலை, மௌனகீதங்கள், ராஜபார்வை, மீண்டும் கோகிலா.

இந்த ஆண்டு வெளிவந்த பாலச்சந்தரின் படங்கள் எங்க ஊர் கண்ணகி, தில்லு முல்லு, தண்ணீர் தண்ணீர் மற்றும் 47 நாட்கள். தண்ணீர் தண்ணீர் படத்திற்கு 1981ஆம் ஆண்டு தேசியவிருது கிடைத்தது. தண்ணீரால் மக்கள் படும் அல்லல்களை யதார்த்தமாக சித்திரித்த படம். வியாபார ரீதியில் பெரிதாக வெற்றி [illegible]ள்ளாவிட்டாலும் பாலச்சந்தர் தனது பக்கத்தை இப்படத்திலும் காட்டத்தவறவில்லை.

இதற்கு முந்திய ஆண்டும் (1980), பிந்திய ஆண்டும் (1982) ஒவ்வொரு தமிழ்ப் படங்கள் மட்டும் தந்த K. பாலச்சந்தர் இவ்வாண்டில் (1981)இல் 4 தமிழ் படங்களும், 5 மற்றைய மொழிப்படங்களையும் தந்ததும் ஒரு சிறப்பே!

இவ்வருடம் பாரதிராஜாவின் இரண்டு தமிழ்ப்படங்கள் வெளிவந்தன. கார்த்திக், ராதா நடித்து வெளியான அலைகள் ஓய்வதில்லை மற்றும் கமலஹாசன் நடித்த டிக்-டிக்-டிக். இதில் அலைகள் ஓய்வதில்லை 25 வாரங்கள் ஓடி வெள்ளி விழாக்கண்ட சிறந்த படம். 1977இல் 16 வயதினிலே தமிழ் உலகில் காலடி பதித்த பாரதிராஜா 1978இல் கிழக்கே போகும் ரயிலில் பயணம் செய்து, சிவப்பு ரோஜாக்களைப் பறித்து, 1979இல் புதிய வார்ப்புகள் உருவாக்கி, பூக்களின் வாசனைகள் மாறினாலும் நிறம் மாறாத பூக்களாக பாதுகாத்து, கதாநாயகனாக கல்லுக்குள் ஈரத்தைக் கண்டுபிடித்து, நிழல்களாக சினிமாவில் தொடர்ந்து, புதியவர்களுடைய அலைகள் ஓயாமல், டிக் டிக் டிக் என சினிமாவில் காதல் ஓவியம் (1982) படைக்கும் பாரதிராஜா சினிமாவிற்கு ஒரு சிறப்பு.



சிவாஜி கணேசனின் 7 படங்கள் வெளிவந்தன. [illegible]கனப்புன்னகை, [illegible]ய சுந்தரம், அமரகாவியம், கல்தூண், லாரி [illegible] டிரைவர் ராஜாக்கண்ணு, மாடி வீட்டு ஏழை மற்றும் கீழ்வானம் சிவக்கும். 1981ஆம் ஆண்டு ரஜினியால் ஆறுபடங்கள் வெளிவந்தன. 'தீ' ஆண்டின் தொடக்கத்தில் வெளியானது. 60 நாட்கள் ஓடியது. அதன் பின்பஞ்சு அருணாசலத்தின் 'கழுகு', கர்ஜனை, SP. முத்துராமன் இயக்கிய நெற்றிக்கண் சத்தியாமூவிஸ் இன் ராணுவ வீரன் முதலிய படங்கள் வெளிவந்தன. மற்றும் தில்லு முல்லு, நெற்றிக்கண் படங்களில் இரண்டை வேடத்தில் ரஜினி நடித்து இருந்தார். நெற்றிக்கண் 100 நாட்களைக் கடந்து ஓடியது. இந்த ஆண்டு ரஜினிக்கு சிறந்த ஆண்டு என்று சொல்ல முடியாது.

---

வேலவன் **Films** வழங்கும்
சினிமா போட்டி

அடுத்த இதழிலிருந்து இலவசமாக சினிமா பார்ப்பதற்கான சினிமா போட்டி ஆரம்பமாகின்றது.

எதிர்பாருங்கள்.


**WANTED**
**FULL OR PART-TIME**
**REPRESENTATIVES & TELEMARKETERS**

**REPRESENTATIVE MUST BE**
* A good communicator
* Out going
* Love to talk to people

**TELEMARKETER MUST BE**
- Must speak Tamil and English fluently
- Experience is an asset

We supply training and support
You will be earning while you are being trained

- தமிழிலும் ஆங்கிலத்திலும் திறமையாக பேசக்கூடியதாக இருக்க வேண்டும்.
- சிறப்புப் பயிற்சி தரப்படும்.
- பயிற்சி தரும் காலத்திலும் ஊதியம் கொடுக்கப்படும்

Please call: (416) 756-3409 / (416) 250-8596



**S.G.M**
steam carpet cleaning
*சோபா செற் *வீடுகள் *காரின் உட்புறம்
*Apartments*Condominiums*carpets
மிகவும் குறைந்த செலவில் செய்துகொள்ள இன்றே அழையுங்கள்
Toronto
Home: (416) 754-0963
Cell:(416) 455-9402
கணேஸ்
Missisauga
(905) 403-0139



**NTN MOVING**



உங்களது பொருட்களை இடமாற்றம்
செய்யவும் வீடு இடம்மாறும் போது
உங்களது பொருட்களை இடமாற்றம்
செய்யவும் நகரில் நம்பிக்கையான,
நல்லவித சேவையை பெற்றுக்கொள்ள அழையுங்கள்

Bala : (416) **434-4391** Pl. Leave message



**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**
Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12
Professional Photographer - கதிர்



☎: (416) **750-8118**
*2381 EGLINTON AV. E.*
*KENNEDY/ EGLINTON, SCARBOROUGH*



**Neelam SILK**
**நீலம் சில்க்**
உயர்ரகப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்



- முகூர்த்தப்பட்டுப் புடவைகள் * பாரம்பரிய பட்டுப் புடவைகள்
- Thread work பட்டுப்புடவைகள் * ரிசு சேலைகள்
- காஞ்சி 2000 ரிசு சேலைகள் * Emboss Tissue சேலைகள்
- Cut work சேலைகள் * அபூர்வா 2000 cut work


மைசூர் சில்க் சேலைகள், சோனா, மீனா (Sona Meena) புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள்

"தமிழர் மத்தியில் தரமான பட்டுப்புடவை மாளிகை"
'நீலம் சில்க்'

TEL: (416) 778-7455 FAX: (416) 778-8484
1453 GERRARD STREET EAST (INDIAN Bazzar)

# 21ஆம் நூற்றாண்டில் கணணி இல்லாமல் மனிதன் வாழமுடியுமா?

-ராஜா சொக்கலிங்கம் raja@systemsplus.net
Computer Consultant



## பகுதி 19

## கணணியின் மென் பொருள [Computer Software]

### குரங்கின் Upgrade Version மனிதன்

மென்பொருளில் வல்லுனராக இருக்கவேண்டிய நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டிய இன்னொரு விடயம். உங்களுடைய கணணியில் இருக்கும் இந்த மென்பொருள்கள் எங்கு பதிவு செய்யப்படுகிறது. அதனுடைய அளவு என்ன? அதனுடைய தன்மைகள் என்ன? என்பவற்றை தெரிந்து வைத்துக் கொள்வது மிகமுக்கியம். உதாரணமாக சொல்லப்போனால் உங்களுடைய கணணியில் உள்ள Hard drive என்று சொல்லக்கூடிய எல்லா File களையும் சேமித்து வைக்கக் கூடிய ஒரு இடம் அதனுடைய அளவு என்ன இது Mega Byte, Giga Byte போன்ற அளவுகளில் வருகிறது. 10GB உள்ள ஒரு Hard Drive உங்களுடைய கணணியில் இருந்தால் அதனுடைய 3 இல் ஒரு பாகத்தை பயன்படுத்தாது விட்டுவிட வேண்டும். கணணி தான் தன்னுடைய உபயோகத்திற்கு வைத்துக் கொள்ளவும் நீங்கள் ஒரு Program ஐ Open செய்கிறீர்கள். தற்காலிகமாக அந்தப் Program இல் உள்ள File களை Hard Drive எழுதி உங்கள் பயன் முடிந்தவுடன் அதை அழித்து விடும். இது போன்றே கணணி உங்களுக்கு உதவி செய்வதற்கென்று சில Program களை அப்பொழுதே எழுதும் இதனால் தான் சில Program கள் Open செய்வதற்கு நேரம் எடுக்கும். ஏனென்றால் சில File களை தற்காலிகமாக எழுதி உங்களுக்கு அந்த Program களைக் கொடுத்து அதை முடித்தவுடன் அதை அழித்துவிடும். இப்படிக் கணணி தான் உபயோகப்படுத்துவதற்கென்றே சில இடங்கள் தேவைப்படுகின்றது. நீங்கள் வைத்திருக்கும் Hard-Drive இல் மூன்றில் ஒரு பாகம் அல்லது நான்கில் ஒரு பாகம் பயன்படுத்தாமல் வெறுமையாக விட்டு வைக்க வேண்டும். இது மிக முக்கியம் அப்படி இல்லாவிட்டால் உங்களுடைய Copmuter Freeze ஆவதற்கு வாய்ப்பு மிக அதிகம் இருக்கிறது. அல்லது வேகம் குறைவதற்கு மிக அதிக வாய்ப்பு இருக்கிறது. அல்லது சில File களை திறக்க முடியாது என்று சொல்வதற்கும் Illegal Operation என்று சொல்வதற்கும் பல வகையான வாய்ப்புகள் இருக்கின்றது. இப்படி உங்களுடைய Computer இல் உள்ள Hard Drive எவ்வளவு பெரிது. அதை எவ்வளவு தூரம் பயன்படுத்துகிறீர்கள்

எவ்வளவு இடம் அதில் பயன்படுத்த தயாராகி அல்லது பயன்படுத்தாமல் இருக்கின்றது என்பதை எப்படி பார்க்க வேண்டும் என்பதை தெரிந்த கொள்ள வேண்டும். இதற்கு ஒரேஒரு சுலபமான வழி ஒன்று சொல்லுகிறேன். இதை வைத்தி மற்றதுகளை தெரிந்த கொள்ளலாம். Windows 95, 98 or Me போன்றவற்றில் நீங்கள் செல்லவேண்டிய இடம் My Computer என்ற Desk Top இல் உள்ள அந்த Icon ஐ திறந்து உள்ளே சென்றால் C Drive, D drive போன்ற அதே Hard Drive இனுடைய அந்த Icons அங்கே இருக்கும். அதன்பின் C Drive இனுடைய Properties க்கு செல்ல வேண்டும். C Drive இன் மேல் Right Mouse ஐ Click செய்து அதனுடையய Properties க்கு சென்றீர்கள் என்றால் இந்த C Drive இனுடைய முழு அளவு என்ன அதில் எவ்வளவு இடம் நீங்கள் பயன்படுத்தி இருக்கிறீர்கள். எவ்வளவு பயன்படுத்தாமல் (Free) இருக்கின்றது என்ற அந்த படம் (Graf) அளவு எல்லாம் இருக்கும். இதை பார்த்து தெரிந்து கொள்வது நல்ல ஒரு முதல் உதவி அன்று சொல்லலாம். உங்கள் கணணியில் ஏதாவது பிரச்சினை வந்தால் இதை சென்று பார்ப்பது நல்லது. சாதரணமாக ஒரு வைத்தியர் ஒருவருடைய Blood Pressure ஐ யோ Temperature ஐ யோ பார்த்து வைத்துக் கொண்டு வைத்தியம் பார்ப்பது போல இது ஒரு முதல் உதவி என்று சொல்லலாம். இதே போல அந்த C Drive இனுடைய வேகத்தை அதிகப்படுத்துவதற்கும் அதாவது கணணியினுடைய முழுவேகதத்தினுடைய ஒரு குறிப்பிட்ட பகுதிதான் சொல்வது வேகத்தை அதிகப்படுத்துவதற்கும் அல்லது அந்த C Drive இனுடை File களிலும் ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் சரி செய்வதற்கும் நீங்கள் தெரிந்து வைத்திக் கொள்ள வேண்டிய அடுத்த உபகரண உபயோகம் Scan Disk மற்றும் Defrag இந்த இரண்டு உபயோகங்கள் மிக உபயோகம் என்று சொல்லலாம். மாதம் ஒரு முறை அல்லது மாதம் இருமுறை உங்களுடைய File கள் ஒன்றாகி அடுக்கப்0பட்ட உபயோகததிற்கு தயாராகி வைப்பதனுடைய தன்மை தான் Defrag அதற்கு சரியான உதாரணம் குழந்தைகள் விளையாடிய பின்பு குழப்பிக் கிடக்கும் அவர்களுடைய விளையாட்டுப் பொருள்களை எடுத்து ஒழுங்காக அடுக்கி வைத்து மறுநாள் அவர்கள் விளையாடுவதற்கு தயாராக வைக்கும் ஒரு Arrangement என்று சொல்லாமல். இதே போலத்தான் இந்த Defrag இங்கும் அங்கும் இருக்கும் File களை ஒன்றாக இணைத்து பெரிய Fileகள் சின்ன Fileகள் ஆகியவற்றை வகைப்படுத்தி வைக்கும் வேலைப்பாடுதான் இந்த Defrag என்று சொல்லப்படும். இதை நீங்கள் செய்வதால் உங்கள் கணணியினுடைய வேகம் நன்றாக இருக்கும். இதே போலத்தான் Scan Disk க்கும் உங்களுடைய Hard Drive File களை Scan செய்து ஏதாவது குறைபாடுகள் இருந்தால் அந்த குறைபாடுகளை சரி செய்து ஒழுங்குபடுத்துவதான் Scan disk என்று பெயர். இதை கூட மாதம் ஒரு முறை உங்களுடைய கணணியில் செய்வது நல்லது.

உதாரணமாக உங்களுடைய Car இற்கு Oil change, Engine Tune up போலத்தான். இந்த Drfrag க்கு Scan disk இம் ஆகும். இவைகளை மாதம் ஒருமுறையாவது செய்து உங்களுடைய கணணியின் பயன்பாட்டை இன்னும் அதிகரிக்கலாம். இது போல இன்றைய Software Application மட்டும் படித்தவர்கள் கூட தெரிந்து வைத்துக் கொள்ளக் கூட சில Hard Ware Application களை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். கணணியில் உங்களுக்கு ஆர்வம் உள்ள பகுதியை எடுத்து அதில் படித்து சிறப்பு பெற ஆசைப்படுங்கள். எந்த ஒரு Program என்றாலும் அதனுடைய Version அளவு என்பவற்றை தெரிந்த கொள்ள ஆசைப்படுங்கள். பெரியவர்கள் சொல்வார்கள் பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகம் இல்லை. அருள் இல்லாதவர்களுக்கு அவ்வுலகம் இல்லை என்பதை கணணி இல்லாதவர்க்கு இவ்வுலகம் இல்லை என்று சொல்லலாம். கணணியில் முழு உபயோகத்தை போகப்போகத் தான் தெரிந்துகொள்ளப் போகிறீர்கள். இன்று நடுத்தர வயதில் இருக்கும் நீங்கள் வயதி முதிர்ந்த காலத்தில் துணையாக இருக்க இந்தக் கணணியை பழகிக் கொள்ளுங்கள். அல்லது பிற்காலத்தில் உங்களுக்கு துணையாக இருக்கக் கூடிய நண்பனை இழந்து விடுவீர்கள். ஒரு சமுகத்தில் இருந்து தாழ்த்தப்பட்டவராகி விடுவீர்கள்.

*இதில் வரும் ஒருசில சந்தேகங்களையோ அல்லது எந்தத் துறையைப் பற்றி எழுதலாம் என்று நினைக்கிறீர்களோ என்பதைப் பற்றி **'உலக தமிழோசை'** க்கு நீங்கள் அறியத்தரவும். vlambaram @email. com*

தமிழர்கள் மத்தியில் பலவருட அனுபவம் மிக்கவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதியதோர் வெதுப்பகம்
BREAD MASTER BAKERY
பிறட் மாஸ்ரர் பேக்கரி
மொத்த ஓடர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்
றோஸ் பாண் கிடைக்கும்
பாண், பணிஸ், றோல்ஸ் அனைத்தும் சுடச்சுட எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
வாரத்தில் 7 நாட்களும்
3 for 0.99¢
31 TAPSCOTT ROAD, UNIT #B3
LOWER LEVEL, MALVERN TOWN CENTRE - SCARBOROUGH
TEL: (416) 299-5083



EZ DRIVING SCHOOL
நவீன தன்னியக்க வாகனங்களில் சொந்த மொழியில் பயிற்சி விளக்கங்களுடன் அரச அனுமதி பெற்ற பயிற்சியாளரிடம் பயிற்சி பெற தொடர்புகொள்ளுங்கள்
JEYAKUMAR ✆ (416) 283-4100 Cell: 822-6741
(10 வருடகால அனுபவ பயிற்சியாளர்)



நகரின் மத்தியில் பெரியதோர் தமிழ் நிறுவனம்
செரண்டிப்
(F)பிறஸ் மார்க்கட்
நாளாந்த பாவனைக்கு தேவையான சகல பொருட்களையும் நாளாந்தம் மலிவு விலைகளில் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
SERENDIB FRESH MARKET
Tel: (416) 269-9913
2631 Eglinton Ave. East,Scarborough,Ont.M1k 2S2




# விண்வெளி

சூரியக்குடும்பம்:- 48

தருபவர்:- கனி

வால்வெள்ளிகள் என்றால் என்ன என சென்றதடவையில் கூறியிருந்தேன். இன்று மேலும் சில தகவல்களைப் பார்ப்போம். பொதுவாக வால்வெள்ளிகளின் வால்கள் இரண்டு வகையில் காணப்படும். முதலாவது வகை வால்கள் "வாயு வால்"கள் எனப்படும். இவை வால்வெள்ளியின் கருவில் இருந்து நேராக நீண்டு, ஒடுங்கிய வெண்புகை மண்டலம் போல்க் காணப்படும். இந்த வால் முழுக்க முழுக்க ஏற்றம் பெற்ற வாயுத் துணிக்கைகளினால் ஆனவை என்கிறார்கள் அடுத்த இரண்டாவது வகை வால்கள் "தூசு வால்"கள் (Dust Tail) எனப்படும். இவை வால்வெள்ளியின் கருவில் இருந்து வளைந்து காணப்படும். பனியால் ஆன வால்வெள்ளியுடன் சேர்ந்து காணப்படும் இந்தத் தூசுக்கள் வால்வெள்ளி சூரியனை அண்மிக்க பனி ஆவியாகும் போது விடுவிக்கப்படுகின்றன. பல்வேறு வகையான, பல்வேறு அளவிலான இந்தத் தூசுக்கள் சூரியனின் கதிர்களின் சக்தியால் வால்வெள்ளியில் பின்னோக்கித தள்ளப்பட வால்வெள்ளிக்கு வால்கள் தோன்றுகின்றன.




இந்த வால்கள் சுமாரர் $10^7$Km இல் இருந்து $10^8$Km வரை அண்டவெளியில் வியாபித்துக் காணப்படும். மிகப் பெரிய வால் 1 வானியல் அலகு தூரத்திற்கு அதாவது சூரியனில் இருந்து பூமியினது தூரம் அளவிற்கு பெரியதாகக் காணப்படுகிறது. வானில் சுமார் $30^0$ கோணத்தை ஏற்படுத்தக் கூடியது.

இது வரையில் 600க்கு மேற்பட்ட வானவில்களை இனம் கண்டுள்ளார்கள்.. இவற்றில் கிட்டத்தட்ட 100 வால்வெள்ளிகள் வரை எமது சூரியத தொகுதியின் உள் காணப்படுகின்றன. இவற்றில் ஒன்றுதான் "ஹெலிவால்வெள்ளி". சூரியனை ஒரு குவியமாகக் கொண்டு சூரியனை வலம் வரும் இந்த வால்வெள்ளிகளின் சுற்றுகைக் காலம் 200 வருடங்களுக்கும் குறைவு. ஹெலியின் வால்வெள்ளி சூரியனை ஒருமுறை வலம் வருவதற்கு சுமாராக 76 வருடங்கள் எடுக்கிறது. அதாவது ஹெலியின் வால்வெள்ளியை (Comet Halley) 76 வருடங்களுக்கு ஒரு தடவை வான்வெளியில் பார்க்கலாம்.

இந்த வால்வெள்ளிகள், சூரியனும் அதன் ஒன்பது கோள்களும் அமைக்கும் தளத்துடன் சுமார் $30^0$ கோணத்தை அமைத்து சூரியனை வலம் வருகின்றன. இவை எவ்விதம் எங்கிருந்து வருகின்றன? எப்பொழுது தோன்றின என்பது பற்றிய விளக்கம் இன்னமும் தெளிவாக இல்லை. ஆயினும் ஒல்லாந்தின் விஞ்ஞானியான **Jan Oort** என்பவரின் வால்வெள்ளிகளுக்கான கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன்படி வால்வெள்ளிகளுக்கான விளக்கங்கள் கொடுக்கப்படுகிறது.

"ஓர்ற்" இன் கொள்கையின்படி, சூரியத் தொகுதி தோன்றிய பொழுது இளம் சூரியனின் வீசுகதிர் சக்தி சூரியத் தொகுதியை துப்பரவு செய்தது. அச்சமயத்தில் பெரிய கோள்களைத் தவிர்ந்த ஏனைய சிறிய துணிக்கைகள் எல்லாம் சூரியனில் இருந்து வெகு தொலைவுக்கு தள்ளப்பட்டன.. அவ்விதம் தள்ளப்பட்ட சிறிய பொருட்கள் அனேகமாக இலேசான பனித்துகள்கள் எல்லாம் தூசுக்களுடன் இணைந்து சூரியனில் இருந்து சுமார் 10,000 இல் இருந்து 100,000 வானியல் அலகு தூரத்தில் தங்கி ஒரு கூட்டமாக சூரியனை மெதுவாக வலம் வரத் தொடங்கின. இதனை **Oort Cloud** என்பார்கள். இந்த ஓர்ற் கூட்டத்தில் சுமார் 200 பில்லியன்களுக்கு மேற்பட்ட வால்வெளிகளாவது இருக்க வேண்டும் என்பது ஆய்வாளர்களது கணிப்பு. இந்தத் தூரத்தில் சூரியனை நீர்வளையப் பாதையில் வலம் வரும் இத் திண்மங்களுக்கு வால்கள் ஏதும் கிடையாது. 15Km விட்டத்திலும் குறைவான பருமனானவை.


இந்த ஓர்ற் கூட்டம் சூரியனில் இருந்து வெகு தொலைவில் இருப்பபதால் [ ஏறக்குறைய சூரியனுக்கு மிக அண்மையில் இருக்கும் நட்தர்திரத்தின் தூரத்தினது 35 வீதமான தூரம்] இதனை சூரியத் தொகுதியில் சேர்ததுக் கொளிவதில்லை. மேலும் இந்த Oort Cloud இல் உள்ள துணிக்கைகள் மிகவும் சிறியனவாகையால் இவற்றை இனம் காணவும் முடியாது. அதனால் Oort Cloud இன்னமும் அடையாளம் காணப்படவில்லை. எனவே உறுதிப்படுத்தப்படாத ஆனால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய ஓர்ற் கொள்கை இன்னமும் தழும்பல் நிலையிலேயே உள்ளது.

அடுத்த தடவையில் வால்வெள்ளிகளினால் பூமியில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் பற்றிப் பார்ப்போம்.


YARL WINDOW COVERING
1530 WARDEN AVENUE

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இப்பொழுதே தொடர்புகொள்ளுங்கள்

CUSTOM MADE..
* VENETIAN BLINDS
* VERTICAL BLINDS
* ROLLER BLINDS
* PLEATED SHADES
* DRAPERIES



இருபத்தாறு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் திரைச் சேலைக் தைத்தக் கொடுக்கப்படும்

தொடர்புகளுக்கு: என். செல்வம்
(416) 383-0205
(416) 650-0377

FREE ESTIMATE



நான் ஒரு வழக்கறிஞர் இல்லை!



வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?

முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள் பின் இவரை அழையுங்கள்

எஸ்.கே.தீசன்
S.K.Theesan

416-631-6322



CRIMINAL
கிறிமினல் வழக்குகள்
DOG BITES
SLIP & FALL




ஃ கிரகப் பொருத்தம் பார்த்தல்
ஃ சுபமுகூர்த்தம் கணித்தல்
ஃ சாதகக் குறிப்பு கணித்தல்
ஃ பலன் பாாத்தல்
ஃ எண் சோதிடப்படி ஆலோசனை கூறுதல்



☎: 299-8361





ELECTRICAL REPAIRS

உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் றேடியோக்கள் வீடியோக்களை குறைந்த செலவிலும்,சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்

முருகதாஸ் - ☎ 261-6883

# மகாராஜாஸ்

## CASH & CARRY, WHOLESALE



**IMPORTERS, EXPORTERS, DISTRIBUTORS FOR EXCLUSSIVE PURE SILK SAREES, CANADA - EUROPE.**

வண்ணக் கலவைகளின் வடிவமைப்பில்
எண்ணற்ற டிசைன்களை எழில் மிகு
கோலமாய்அள்ளித் தருபவர்கள்

# MAHARAJAS

**FOR WHOLESALE CONTACT MOHAN**

## (416) 284-6406

## (416) 727-0643

## மொத்த விற்பனையாளர்கள்

- KIBS சாரம், லுங்கி வகைகள்
  4,8,9, முழம் சகலவிதமான வேட்டி சால்வைகள்
  2001 ஆண்டிற்கான Latest Designs, Seequence Beats, Glass Fancy சேலைகள்
- கொட்டன், கோட்டா Shifon சாறிகள், சேலைகள், சுவாமிப்பட்டு, சுவாமி அலங்கார சேலைகள், மற்றும் பஞ்சாபி சூட், சல்வார் கமிஸ் வகைகள்
- கோலம், காயத்ரி பிரிண்ட், றங்கோலி சாறிகள்
  Soft Tissue பனாரஸ் சேலைகள்
  மிலேனியம் New Print Latest டிசைன் சேலைகள், with blouse pcs
- ஆயிரக்கணக்கான தெரிவுகளை மொத்தமாகப் பெற்றுக்கொள்ள மிகச் சிறந்த இடம்
- ஜவுளித் துறையில் இங்கு பத்து வருடங்களுக்கு மேல் புடவை வகைகளை இறக்குமதி செய்பவர்கள்

**Please call for an appointment to make wholesale purchases.**

# 5ம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
18.07.1920

மறைவு
29.10.1995

# மூ. நாகரட்ணம் (பாக்கியம்)

தாயிற் சிறந்த கோவில் இல்லை அம்மா
உயிர் கொடுத்து உணர்வு ஊட்டி எங்கள் நெஞ்சங்களில் வீற்றிருக்கும் அம்மா
உங்கள் அரவணைப்பும், அறிவு உரையும், ஞாபக சக்தியும், உங்கள் நினைவும்
எங்கள் உயிர் இருக்கும் வரை எங்கள் மனதைவிட்டுப் போகாதம்மா
எங்களை விட்டகன்று ஐந்து வருஷம் முடிந்தாலும்
எங்கள் உயிர் இருக்கும் வரையும் இரத்தக்கண்ணீர் வடிப்போம் அம்மா
ஐந்து பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் உற்றார், உறவினர் இருந்தும்
ஒருவருடைய கண்ணிலும் காணமல் போய்விட்டீர்கள் அம்மா
முகவாட்டம் அறிந்து செய்யவேணும் பிள்ளைகள், பிள்ளைகள் என்று சொல்லுவீர்கள்
அம்மா ஆனால் உங்கள் வாட்டம் அறிய ஒருவரும் இல்லை அம்மா
எங்களை விட்டு போகவில்லை அம்மா நாங்களும் உங்கள் நினைவிலே இருப்போம்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்தனை செய்கிறோம்

உங்கள் பிரிவால் துயறுரும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளை , உற்றார் உறவினர்
(416) 292-3582

# "ராசம்மாவின் ராஜ்யம்"

நகைச்சுவைத் தொடர்... (30)　　　　-கலகலப்பு தீசன்-

சிரித்து　　　சிந்திக்க

"பிள்ளைகளின் நல்வாழ்வை நினைக்காத தாய் தேப்பனும் தாய் தேப்பன் கஸ்டப்பட்டு வளர்த்ததை நினைக்காத பிள்ளையளும் இருக்கும் போது..."





ரூபி... புத்தகத்தில் தேனீர் வைப்பது எப்படி
என.... பக்கங்களைப் புரட்டிக்
கொண்டிருக்கும் பொழுது....
இஞ்சை... வா. பிள்ளை... என்று கேற்றிலில்
ஏதோ.. ஒரு அளவு தண்ணீர் எடுத்து
கொடுத்தா... ராசாத்தியக்கா...
ஐ... நோ... கௌ... ரூ... புளக் இற் எப்படி.
கேற்றில் வயரை கொழுவுவது என... கெஞ்சல் குரலில்
சொன்னா.... ரூபி...
வெரி குட் வெரி குட் என்றே...ராசாத்தியக்கா.....
ஒரு மூலையில் நின்று... இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தா....
ராசம்மாக்கா கேற்றிலிருந்து ஸ்..... என்ற சத்தம் வரத் தொடங்கியது.
தண்ணி.... கொதிக்குது பிள்ளை என்றா.... ராசாத்தியக்கா......
இதே வேளையில் உலகரின் மனம் கொதித்துக் கொண்டிருந்தது.



கொம்பியூட்டரில் டிப்புளோமா என்ற பலருக்கு
கோப்பி... போடவும் குளம்பு வைக்கவும் தெரியாது.
படிக்க தெரியாத எத்தனை...சனங்கள் பலகாரம்
சுவையாக செய்கிறார்கள்..........
ஒரு தேத்தண்ணி வைக்க... எத்தனை அமளி......
அன்னம்மாக்கா...
சூரன் போர் இந்த முறை பாக்கேல்லையே என்று
கதையை திருப்பினா.... ராசாத்தியக்கா....
ஏன்.. ஒவ்வொரு நாளும் தானே.. சூரன் போர் பார்க்கிறியள்
என்றா... அன்னம்மாக்கா உலகரைப் பார்த்தபடி...



அது சரி... அன்னம்மாக்கா....
'தாங்ஸ் கிவ்விங்' க்கு எங்கே போனீர்கள்
என்ற படி....ரூபி போட்ட ரீயை வைத்தபடி
கேட்டா...ராசரத்தியக்கா......
நன்றி மறக்காமல் இருக்கிறவை தான் அதைக்
கொண்டாடலாம்

**"பிள்ளைகளின் நல்வாழ்வை நினைக்காத தாய் தேப்பனும்**
**தாய் தேப்பன் கஸ்டப்பட்டு வளர்த்ததை நினைக்காத**
**பிள்ளையளும் இருக்கேக்குள்ளை"**



என்ன ராசாத்தி தாங்ஸ் கிவிங்..... என்று....
பல குழல் பீரங்கி சுடுவது போல ஒவ்வொரு சொல்லாலும்
உலகரைச் சுட்டுப் பொசுக்கினார்.

**அன்னம்மாக்கா! ஆட்டிலெறி... அன்னம்மா....**
**என்ன பொருத்தமான பெயர்**
**" ஆறடித் துப்பாக்கியை விட**
**ஆறங்குல நாக்கு எவ்வளவு பலமானது"**

**"மனிதன் வாழ்வில் எப்படியெல்லாம் இருக்க வேண்டுமென்பது ஒரு காலம்.**
**காலம் செல்லச் செல்ல எப்படியெல்லாம் இருந்தோம் என சிந்திப்பது ஒரு காலம்"**



தீபாவளி வருகிறது....வெடி கொழுத்தி
அகலக் கரைசேலையுடன் ராசம்மா...
பட்டுவேட்டியுடன் உலகர்



*ஆளளவு கிடாய் வளர்த்து*
*ஆளுக்கொரு பங்கு கெடுத்து*
*தலைக்கு மேல் நல்லெண்ணை*
*அதற்கு மேல் வெறியண்ணை....*
*கட்டிய வேட்டி*
*கல்லொழுங்கை தானுருள...*
*வேட்டிக்குரியவனோ*
*வெறும் நிலத்தில் தானுருள....*

உலகரின் மனதில் கவிதை பொங்கியது
மொத்தமாக நினைத்த போது கண்ணீர் பொங்கியது.
பெற்ற தாயையே கூறுபோடும் காலம் இது
(இலங்கை...அரசியலைக் கூறவில்லை)



ஹாய்! ரூபன்...... தீபாவளிக்கு....தெனாலி........ படம்
பாப்பமா?.... நல்ல படமாம்?...
கமலும்... ஜோதிகாவும், தேவயானியும் நல்லா
நடித்திருக்கினம் என்று ரூபி....சொல்ல...
